# News Release
# Communiqué

**Ministry of Health and Long-Term Care** **Ministry of Health and Long-Term Care**

உடனடி வெளியீட்டிற்கு
ஆகஸ்ட் 28, 2007

**முதியவர்கள் வீட்டில் சுதந்திரமாக வாழ உதவும்பொருட்டு மக்கென்டி அரசு சமூக வாழ்வை மாற்றி அமைக்கிறது**

*முதுமைகாலத்தில் வீட்டில் வாழும் திட்டம் LHIN ஆல் முன்னெடுக்கப்பட்டு உள்ளூர் கலாச்சார பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும்*

டொரொன்டோ – முதியவர்கள் நலமுடன் தங்கள் வீடுகளிலேயே சுதந்திரமாக வாழ்வதற்கு சமூக சுகநல சேவைகளை மாற்றியமைக்கும், முதுமை காலத்தில் வீட்டில் வாழும் திட்டத்தை மக்கென்டி அரசு ஆரம்பிக்கிறது, எ ன சுகாதார மற்றும் நீண்டகால பராமரிப்பிற்கான அமைச்சர் ஜோர்ஜ் ஸ்மிதமான் இன்று அறிவித்தார்.

" ஒன்டாரியோவின் முதியவர்கள் உண்மையில் எப்படி வாழ விரும்புகிறார்கள் என்பதைப் பிரதிபலிக்கும், புதிய வாழ்க்கைப் பாணித் தெரிவுகளை அவர்களுக்கு வழங்கும் ப ல வாய்ப்புக்களை வழங்குவதே எமது இலக்கு" என்றார் ஸ்மிதர்மான். " எமது சனத்தொகை முதிர்வயது அடைகையில், அவர்களின் தேவைக்கேற்றபடி, அவர்களுடைய எஞ்சிய வாழ்நாள் முழுவதும், தங்கள் சொந்த வீடுகளிலேயே சௌகரியமாகவும் கௌரவமாகவும் வாழ அனுமதிக்கும் புதிய வழிமுறைகளை நாம் தேட வேண்டும்."

700 மில்லியன் டொலர், மூன்று வருட கால திட்டத்தின் பாகமாக, ஒன்டாரியோவின் உள்ளூர் ஹெல்த் இன்டெகரேஷன் நெட்வெர்க் (LHINs) கிளர்ச்சியூட்டும் முன்னெடுப்பை தொடங்கும். இது உள்ளூர் முதியோர் சனத்தொகையின் தேவைகளுக்கு ஏற்றபடி ஆதரவு சேவைகளை சரிப்படுத்தி, சுகநல பராமரிப்பிற்கு அதிகமான மற்றும் நியாயமான வாய்ப்புக்களைத் தந்து, சேவைகள் வழங்கப்படும் விதத்தில் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த சேவைகள், உணவு, போக்குவரத்து, கடைகளுக்கு செல்லுதல், வெண்பனி அகற்றுதல், சிநேக பான்மையுடன் வீட்டிற்கு வந்து போதல், பெரியவர்களுக்கு பகல் நேரத்திட்டங்கள், வீட்டு வேலை சேவைகள், பராமரிப்பு ஆதரவுகள் போன்ற மேம்படுத்தப்பட்ட வீட்டுப்பராமரிப்பு மற்றும் சமூக ஆதரவு சேவைகளை உட்படுத்தக்கூடும்.

“ மக்களை நலமுடன் வீடுகளிலேயே வைத்திருக்க உதவும், சமூக ஆதரவு சேவைகள் மற்றும் சப்போர்ட்டிவ் ஹவுசிங் புரோகிராம் ஆகியவற்றில் உதவியுடன்கூடிய வாழ்க்கை முறையின் பெறுமதியை இந்த அரசு உணர்கிறது என்பதில், ஒன்டாரியோ கம்யூனிட்டி சப்போர்ட் அசோசியேஷன் (OCSA) னும் எமது உறுப்பினர்களும் சந்தோஷம் அடைகிறோம். இந்த சேவைகளினால் வயோதிபர்களும் அங்கக் குறைபாடுள்ளவர்களும் வைத்தியசாலைக்கு, ER அல்லது எமர்ஜென்சிக்கு சென்றுவருவது மற்றும் உரிய நேரத்திற்கு முன்பே பராமரிப்பிற்கென பாரம்கொடுத்தல் போன்றவை குறைக்கப்படுகிற தென ஆதாரங்கள் காட்டுகின்றன – இதுவே நமக்கு மிக அவசியம் தேவை” , எ ன சூசன் தோனிங் கூறினார், OCSA, CEO.

ஒன்டாரியோவின் கலாச்சாரரீதியில் வேறுபட்ட சனத்தொகைக்கும் சர்விஸ் கிளப்புகள் மற்றும் முதியவர்களுக்கு உதவி வழங்கும் குழுக்கள் போன்ற சமூக அளவிலான அமைப்புக்களுக்கும் புதிய சாத்தியங்களை, முதுமைகாலத்தில் வீட்டில் வாழும் திட்டம் வழங்கும். எமது முதியவர்கள் ஆரோக்கியத்துடனும் செயற்பாட்டுடனும் நீண்ட காலமிருக்க ஆதரவுகளை இது வழங்கும். ஒன்டாரியோவின் முதியோர்களுக்கும் அவர்களுக்கு பராமரிப்பு வழங்குபவர்களுக்கும் ஆதரவளிக்கும் LHINs திட்டத்திற்கு, முன்கூட்டிய தடுப்பு மற்றும் ஆரோக்கிய மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கும் சுகநல பராமரிப்பும் புதிய சிந்தனையும், முக்கிய பங்களிக்கும்.

மாகாணம் முழுவதும் அபிவிருத்தியடைந்துவரும் வீட்டுவிடுதிகள் (residential hospices) <u>போல</u>, இன்று நாம் அறிவிக்கும், அரசாங்கத்தின் சமூக முதலீடு வெற்றியடைய பலகாரணங்கள் உண்டு” , என்றார் ஸ்மிதர்மான். “ தங்களுடைய ச க பிரஜைகளின் வாழ்வில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த முயலும் எண்ணிலடங்கா சமூக தொன்டர்களின் அன்பையும் ஆதரவையும் இந்தத் திட்டம் பயன்படுத்துவது வெற்றிக்கு ஒரு காரணமாகும்” .

“ இது போன்ற புதுவகையான நிதியுதவி முதியவர்கள் தங்கள் வீடுகளிலேயே நீண்ட காலம் வாழ உதவும் என்பதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்,” என்றார் லிலியன் மொர்கென்தா, 50ற்கு மேற்பட்டவர்களின் க னடா அசோசியேஷனின் பிரசிடென்ட்.

இன்றைய முதலீடு, <u>சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த, புதிய</u> நிதி வழங்கும் முறை, நோயாளியை - மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது சனத்தொகையின் உண்மையான சுகநலத் தேவையின் அடிப்படையில், ஒன்டாரியோ முழுவதும் சேவைகளுக்கு நியாயமான வாய்ப்புக்களை ஊக்குவிப்பதுடன் <u>சனத்தொகை பெருக்கத்தையும் கருத்திற்கொள்கிறது</u>. மேம்பட்ட சேவைகளுக்கான நிதி, LHINs ற்கு ஏப்ரல் 2008இல் ஆரம்பிக்கும்.

மொத்தமாக, முதுமைகாலத்தில் வீட்டில் வாழும் திட்டத்திற்கு அரசாங்கம் 702 மில்லியன் டொலர்களை முதலீடு செய்யும்:

| | |
|---|---|
| LHINs ற்கு முதல் வருட திட்டமிடல் | $3,000,000 |
| உதவும் கருவிகளுக்கான திட்டம் (நடமாட்ட உதவிகள்) | $40,000,000 |
| பிராந்திய முன்னுரிமைகள் | $66,000,000 |
| LHINs ற்கு ஒதுக்கீடு | $593,000,000 |

அடுத்த 16 வருடங்களில் ஒன்டாரியோவின் முதியவர்கள் சனத்தொகை இரண்டு மடங்காகுமென கணிக்கப்பட்டுள்ளது. இந்த முதலீடானது நன்கு நிலைத்திருக்கக்கூடிய ஒரு சுகாதார பராமரிப்பு முறையில் விளைவடைந்து அதன் மூலம் முதியவர்களுக்கு ஆதரவுகளை அவர்களுக்கு மிகவும் தேவைப்படும் இடமாகிய வீட்டில் வழங்கும்.

ஒன்டாரியோ வாசிகள் ஒன்று சேர்ந்து உழைத்து சுகாதார சேவைகளில் எவ்வாறு பலன்களைக் கண்டடைந்திருக்கிறார்கள் என்பதற்கு இது மற்றொரு உதாரணமாகும். எனைய முன்னெடுப்புகள் பின்வருமாறு:

- 2003 லிருந்து மேலும் 800 மில்லியன் டொலர்கள் நீண்டகால பராமரிப்பில்
- 2003 லிருந்து மேலும் 463 மில்லியன் வீட்டுப் பராமரிப்பு நிதியில்
- 2003 லிருந்து மேலும்100 மில்லியன் சமூக ஆதரவு சேவை நிதியில்
- 2003 லிருந்து 875 மில்லியன் முதலீடு காத்திருக்கும் காலத்தைக் குறைக்க, 1,270,000 ற்கும் மேற்பட்ட செய்முறைகளை வழங்க.

இன்றைய முன்னெடுப்பு மக்கிண்டி அரசின் புதிய சிந்தனை கொண்ட பொதுசன சுகாதார பராமரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதி, மூன்று முன்னுரிமைகளை வழங்கும் ஒரு முறையைக் கட்டியெழுப்புதல் – ஒ ன்டாரியோ வாசிகளை ஆரோக்கியமாக வைத்திருத்தல், காத்திருக்கும் காலத்தைக் குறைத்தல் மற்றும் வைத்தியர்களுக்கும் தாதிகளுக்கு மேம்பட்ட வழிகளை வழங்குதல்.

ஊடகத் தொடர்புகள்:

ஜெப் ரோரர்
அமைச்சரின் அலுவலகம்
*416-326-8016*

டேவிட் ஜென்சன்
சுகாதார மற்றும் நீண்டகால பராமரிப்பு அமைச்சு
*416-314-6197*

பொது ச ன உறுப்பினர்கள்: 1-866-532-3161

வேறு தலைப்புகளில், கதைகள், ஒலிப்பதிவுகள் போன்ற ஏனைய ஊட க பொருட்களுடன் இந்த செய்தி வெளியீடு எமது வலைப்பக்கமாகிய: http://www.health.gov.on.ca இல் செய்தி ஊட க பகுதியின் கீழ் (News Media section) கிடைக்கப்பெறும்.

சுகாதாரப் பராமரிப்பில் சாதனைகளைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு விஜயம் செய்யுங்கள்: www.resultsontario.gov.on.ca.

*Also available in English.*
*Aussi disponible en français.*

LHIN ஊடகத் தொடர்புகள்

| LHIN | LHIN அலுவலக இடங்கள் | பிரதான ஊட க த் தொடர்பு | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| சென்றல் LHIN | மார்க்கம் | Anna Themelis | 905-948-1872 ext. 203 |
| சென்றல் ஈஸ்ட் LHIN | ஏஜக்ஸ் | Katie Cronin-Wood OR<br>Karen O’ Brien Monaghan | 905-427-5497 ext. 218<br>905-427 5497 ext .212 |
| சென்றல் வெஸ்ட் LHIN | பிராம்ப்டன் | Robert Longphee | 905-455-1281 ext. 235 |
| சம்ப்ளெயின் LHIN | ஒட்டாவா | Robert Cushman, CEO | 1-866-902-5446 |
| ஏரீ சென்ட் க்ளெயார் LHIN | சட்டாம் | Ron Sheppard | 519-351-5677 |
| HNHB LHIN | கிறிம்ஸ்பி | Trish Simmons | C: 289-241-7912<br>905-945-4930 ext 255 |
| மிஸசாகா ஹால்டன் LHIN | ஓக்வில் | Bill MacLeod, CEO<br>John Magill, Board Chair | 905-337-7131 ext. 207 |
| நோர்த் சிம்கோ மஸ்கோகா LHIN | ஒரிலியா | Susan French | 705-326-7750 ext. 234 |

| LHIN | LHIN அலுவலக இட ங்கள் | பிரதான ஊடகத் தொடர்பு | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| நோர்த் ஈஸ்ட் LHIN | நோர்த் பே | Monique Rocheleau | 705-840-2872 ext. 218 |
| நோர்த் வெஸ்ட் LHIN | தன்டர் பே | Lisa Niccoli | 807-684-9425 ext 2017 |
| சவுத் ஈஸ்ட் LHIN | பெல்வில் | Polly Thompson | 613-967-0196 ext. 221 |
| சவுத் வெஸ்ட் LHIN | லன்டன் | Tommasina Conte | 519-672-0445 ext. 208 |
| டொரொன்டோ சென்றல் LHIN | டொரொன்டோ | Sandra Fawcett | 416-969-3281 |
| வார்ட்டலூ வெல்லிங்டன் LHIN | குல்ப் | Marlene Batchelor | 519-648-3275 |